சொல்லப்பட்டு, அந்தச் சங்கத் தலைவருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அத்தியாவசியப் பொருட்களை சம்பந்தப்பட்ட வார்டுகளிலே கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சங்கத் தலைவருக்குத் தெரிவிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

தொழுநோய் மறுவாழ்வு இல்லங்களில் சேர்க்கப்படும் நோயாளிகள்.

152 —(*வினா 18499)—திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழு நோய் மறுவாழ்வு இல்லங்களில் நோயாளிகளைச் சேர்க்கும் பொழுது அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் சேர்க்கப்படுகிறார்களா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கும் அத்தொழுநோய் பரவும் என்பது உண்மையா ?

(இ) அது சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) பொதுவாக அது வயது வந்தவர்களுக்குப் பரவுவதில்லை. குழந்தைகள் தான் பாதிக்கப்படுவார்கள்.

(இ) குழந்தைகள் பள்ளி விடுதிகளில் சேர்க்கப்பட்டு நோயிலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர். நோயற்ற குழந்தைகளுக்கும் நோய் அணுகாமல் இருக்க தடுப்பு மருந்து அளிக்சப்படுகிறது.

திரு. ஆர். ரங்கசாமி : தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்திலே விண்ணம்பள்ளியிலே தொழு நோயாளிகள் மறுவாழ்வு இல்லத்தில் அந்த நோயாளிகளோடு குழந்தைகள் இருப்பதை நாங்களே பார்த்தோம். அப்படி இருப்பதால் நோய் அவர்களுக்கும் பரவாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பெரியார் மாவட்டத்திலே விண்ணம்பள்ளியில் பெரியவர்களோடு அவர்களுடைய குழந்தைகள் தங்கியிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

1984 பிப்ரவரி 23]

குறிப்பிட்டார்கள. அவர்களுக்கு நோய் பரவுகிறது என்ற அடிப் படையில் குழந்தைகளைத் தனியாகப் பிரித்து தனியாக விடுதி அதற்காக ஆரம்பித்து பள்ளி விடுதியில் வைக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. விண்ணம்பள்ளி பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்கள். அப்படி ஏதாவது குழந்தைகள் அவர் களோடு இருந்தால் தனியாகப் பிரித்து அந்த விடுதியில் சேர்ப் பதற்கு அரசு ஏற்பாடு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொழு நோய் பரவாதது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : பெற்றோர்களிடமிருந்து அந்தக் குழந்தைகளுக்கு நோய் பரவுவதாகக் கூறுகிறார்கள். ஆகவே தனியாக வைப்பதற்கு ஏற்ற முறையில் தனியாக ஹோம் ஏற்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : நான் விடை யிலேயே குறிப்பிட்டு இருக்கிறேன். குழந்தைகள் பள்ளி விடுதி களில் சேர்க்கப்பட்டு நோயிலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர். நோயற்ற குழந்தைகளுக்கும் நோய் அணுகாமல் இருக்க தடுப்பு மருந்து அளிக்கப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் தினசரி உணவுச் செலவுக்கான தொகை

153 —*வினா எண். 18524 :—திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களில் உறைவோர் தினசரி உணவுக்காக வழங்கப்படும் தொகை அதிகரிக்கப்பட்டு மீண்டும் குறைக்கப்பட்டு விட்டது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன ?

(இ) மீண்டும் உதவித் தொகையை உயர்த்த அரசு ஆவண செய்யுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS